அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 06 /2018
தேதி : 13.01.2018

## விவசாயம் பற்றிய விழிப்புணர்வு
## மாணவர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட வேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
## நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் அவர்களின்

## பொங்கல் திருநாள் வாழ்த்துசெய்தி.

தைத்திருநாள் என்று போற்றிக்கொண்டாடப்படும் பொங்கல் திருநாள் பண்டிகை தமிழர்களின் தலையான பண்டிகையாகும். உழவுத்தொழிலையும் உழவர்களையும் போற்றி வழிபடுவதர்கென்னும் நன்னாள் இந்நாள் ஆகும்.

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உணவுத்தேவைக்கும் முதுகெலும்பாக இருப்பது உழவுத்தொழில் தான். உலகத்தின் மிகப்பழமையான தொழிலும் உழவுத்தொழில் தான் இத்தகைய நம்மண்ணின் மரபான விவசாயம் நம்மிலிருந்து பிரிந்துவிடக்கூடாது. ஆகவே விவசாயத்தொழிலில் அனைவரும் ஈடுபடவேண்டும் என்கின்ற நோக்கத்தில்தான் “வீட்டுக்கொரு விவசாயியை உருவாக்குவோம்” என்ற கொள்கையை நாங்கள் வலியுறுத்திவருகிறோம்.

அந்த வகையில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விவசாய பாடத்தை தேர்வுக்கு என்று அல்லாது அனைவரின் விருப்ப பாடமாக பாடத்திட்டத்தில் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கும் கல்லூரிக்கும் மாணவர்கள் பயிற்சி முறையில் விவசாயம் பற்றி தெரிந்துகொள்ள ஏதுவாக விளைநிலங்கள் ஒதுக்கித்தரப்படவேண்டும்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



இதன் மூலம் மாணவப்பருவத்திலேயே விவசாயத்தின் தேவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தமுடியும். மத்திய மாநில அரசுகள் இதற்கான செயல்திட்டங்களை வகுத்து தகுந்த நிதி ஒதுக்கி நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும் என்பதை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் பொங்கல் தின வேண்டுகோளாக முன்வைக்கிறேன்.

இப்பொங்கல் திருநாளிலிருந்து தமிழக மக்கள் அனைவரது வாழ்விலும் வளமும், மகிழ்ச்சியும் பொங்கி நிறைவதாக அமையட்டும். இத்திருநாள் தமிழகம் மட்டும் அல்லாது நாடும், உலகமும் செல்வசெழிப்போடு பிறந்து வழிவகுக்கும் நாளாக அமையட்டும் என்று அனைவருக்கும் என் சார்பிலும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com